முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (2.11.2024) தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவைத் தலைவர் அறையில், சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்களை சந்தித்து, ஆஸ்திரேலியா நாட்டின், சிட்னி நகரில் நடைபெறவுள்ள 67வது காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில் கலந்து கொள்ள செல்வதையொட்டி, அவருக்கு சால்வை அணிவித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக

முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் தேர்வு!

ஆட்சிக்குழு ஒருமனதாகத் தெரிந்தெடுத்தது!

சென்னை, நவ.3-

தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் புதிய தலைவராக தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை, ஆட்சிக்குழு ஒருமன தாகத் தேர்வு செய்துள்ளது.

அதன் விபரம் வருமாறு:-

தமிழ் வளர்ச்சிக் கழகத்திற்குத் தலைவர்களாக இதுவரை தி.சு.அவினாசிலிங்கம், (15/08/1947 07/12/1982), சி.சுப்பிரமணியம் (08/12/1982 09/03/1990), முனைவர் வா.செ. குழந்தைசாமி (10/3/1990 10/12/2016) அவருக்குப் பின் முனைவர் பொன்னவைக்கோ ஆகியோர் பணியாற்றியுள்ளனர்.

இப்போது 24/10/24 கூடிய ஆட்சிக் குழுவும் பொதுக்குழுவும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவராகத் தமிழ்ப் பல்கலைக்கழக மேனாள் துணை வேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களை ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்துள்ளது.

இந்திய மொழிகளிலேயே தமிழுக்குத்தான் முதல் கலைக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. உருவாக்கிய அமைப்பு தமிழ் வளர்ச்சிக் கழகம்.

உருவாக்கியவர் அப்போது சென்னை மாகாணக் கல்வி அமைச்சராக (1946 1949) இருந்த திசு. அவினாசிலிங்கம். இவர்தான் தமிழ்வழிக் கல்வியை அறிமுகம் செய்தவர்.

இந்தியா விடுதலை அடைவதற்கும் முன்பே 1946 இல் தமிழ் வளர்ச்சிக்கழகம் தொடங்கப்பட்டிருக்கிறது.

விடுதலை அடைந்த ஆகஸ்ட் 15, 1947 ஆம் நாள் கலைக்களஞ்சியத் திட்டத்தை அறிவித்திருக்கிறது தமிழ் வளர்ச்சிக் கழகம்.

சிலப்பதிகாரத்திற்கு உரை தந்த தமிழிசை இயக்கத்தை உருவாக்கிய விடுதலைக்குப் பிறகு இந்திய அரசின் முதல் நிதி அமைச்சரான ஆர்.கே.சண்முகம் செட்டியார், சென்னைப் பல்கலைக்கழகத்தில் 27 ஆண்டுகள் துணை வேந்தராக இருந்த ஏ.எல்.இலட்சுமணசாமி முதலியார், வடபாதி மாங்கலம் தியாகராஜ முதலியார், டி.கே.சிதம்பரநாத முதலியார், கல்கி கிருஷ்ண மூர்த்தி ஆகியோர் உதவியுடன் பெ. தூரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கலைக்களஞ்சியத் திட்டம் அக்டோபர் 20, 1947 இல் தொடங்கப்பட்டிருக்கிறது.

கலைக்களஞ்சியம் தயாரிப்பதற்கான அறிஞர் குழு அப்போதைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது. அதில் மு.வ., ரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ. மீ., டி.கே.சி. ஆகியோர் உறுப்பினர்களாகவும் கல்கியும் கே.சுவாமி நாதனும் செயலாளர்களாகவும் இருந்துள்ளனர்.

கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் குழந்தைகள் கலைக்களஞ்சியம் 10 தொகுதிகளும் மருத்துவக் களஞ்சியம் 13 தொகுதிகளும் சித்தமருத்துவக் களஞ்சியம் 7 தொகுதிகளும் ஆங்கில மொழியாக்கம் 5 தொகுதிகளும் அறிவியல் தொழில் நுட்பக் களஞ்சியம் 5 தொகுதிகளும் மற்றும் குறுந்தகடுகளும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தால் இதுவரை வெளியிடப்பட்டுள்ளன.

தேர்தல் ஆணையம் மீது சட்ட ரீதியிலான நடவடிக்கை எடுப்போம்!

காங்கிரஸ் கட்சி எச்சரிக்கை!

புதுடெல்லி, நவ. 3-

அரியானா சட்டசபை தேர்தலில் ஓட்டு எண்ணிக்கையில் முறைகேடு நடந்திருப்பதாக தேர்தல் ஆணையத்துக்கு காங்கிரஸ் கட்சி கடிதம் எழுதியது . இதை விசாரித்த தேர்தல் ஆணையம், காங்கிரஸ் அளித்த புகாரை நிராகரித்தது. மேலும், ஆணையம் மீது அடிப்படை ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதை தவிர்க்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த ஓட்டு எண்ணிக்கை நடைமுறை மீது பொறுப்பற்ற குற்றச்சாட்டுகளை கூறுவதால், குழப்பமும், பொது அமைதியின்மையும் ஏற்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியிருந்தது.

இந்த நிலையில், தேர்தல் ஆணையத்திற்கு பதில் கடிதம் ஒன்றை காங்கிரஸ் கட்சி அனுப்பியுள்ளது. கட்சியின் மூத்த தலைவர்களான கே.சி.வேணுகோபால், அசோக் கெலாட், அஜய் மக்கான் உள்ளிட்ட 9 தலைவர்கள் கையெழுத்திட்டுள்ள அந்தக்கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: குறிப்பிட்ட பிரச்சினைகளுக்கு மட்டுமே தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதினோம். தேர்தல் ஆணையம் மற்றும் ஆணையர்களை மதிக்கிறோம். ஆனால், தேர்தல் ஆணையம் எங்களுக்கு அளிக்கும் பதில்கள் தாழ்ந்த தொனியில் உள்ளது.

தேர்தல் ஆணையம் தனக்கு தானே நற்சான்றிதழ் அளித்தது ஆச்சர்யம் அளிக்கவில்லை. ஆனால் தேர்தல் ஆணையம் அளித்த பதிலில் உள்ள தொனியை எளிதாக எடுத்து கொள்ள மாட்டோம் அது எங்களின் தலைவர்களை விமர்சிப்பது போல் உள்ளது. மோசமான தொனியில் உள்ளது. முடிவு எடுக்க வேண்டிய இடத்தில் உள்ளவர்கள். எந்த விமர்சனத்தையும் செய்யக் கூடாது. கட்சியை தாக்கக் கூடாது. ஆனால், தேர்தல் ஆணையத்தின் இது போன்ற கருத்துகளை நீக்குவதற்கு சட்ட ரீதியிலான நடவடிக்கையை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை" என்று அவர்கள் கூறியுள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் - இரண்டு நாள் கோவையில் சுற்றுப்பயணம் !

அமைச்சர் செந்தில் பாலாஜி பேட்டி!

கோவை, நவ.3-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 5 மற்றும் 6 தேதிகளில் கோவையில் சுற்றுபயணம் மேற்கொள்ள உள்ளார். இந்நிலையில், முதல்வர் அவர்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ள இடங்கில், தமிழக மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர் வைத்துறை அமைச்சர் செந்தில்பாலாஜி, காந்திபுரம் மத்திய சிறை வளாகத்தில் அமைக்க உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகம் ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டார்.

இதைத்தொடர்ந்து, அவர் பேட்டியின்போது கூறுகையில்;

விளாங்குறிச்சியில் எட்டு தளங்களுடன் 300கோடி மதிப்பீட்டில் 2,98,000 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய தொழில்

நுட்ப பூங்காவை ஐந்தாம் தேதி முதல்வர் அவர்கள் திறந்து வைக்கிறார்.

ஆறாம் தேதி காந்திபுரம் பேருந்து நிலையம் முன்பிருக்கும் மத்திய சிறைச்சாலை மைதானத்தில், கலைஞர் நூற்றாண்டு நூலகம் மற்றும் அறிவியல் பூங்கா விற்கான அடிக்கல் நாட்டு கிறார். ஏழு தளங்களுடன் ஒரு லட்சத்து 98 ஆயிரம் சதுரஅடி பரப்பளவில் இந்த நூலகம் அமைகிறது.

கோவையில் நடைபெற்ற மூணு மாவட்ட செயற்குழு கூட்டத்தில், நாங்கள் பேசாத கருத்துக்களை எல்லாம் ஒரு நாளிதழ் வெளியிட்டுள்ளது. தவறான கருத்துக்களை மக்களிடையே பரப்ப வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியர் கிராந்தி குமார் பாடி, ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், மாநகர காவல் ஆய்வாளர் பாலகிருஷ்ணன், கோவை மாநகர் மாவட்ட கழக செயலாளர்கள் நா.கார்த்திக் Ex Mla, தொஅ.ரவி, தளபதி முருகேசன் தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர் மேயர் ரங்கநாயகி, துணைமேயர் வெற்றிச் செல்வன், ஏ.பி.நாகராஜ் exMP மாவட்ட துணைச்செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பொதுக்குழு உறுப்பினர் கார்த்திகேயன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

புதுக்கோட்டை - சத்தியமூர்த்தி பெருமாள் கோயில் குடமுழுக்குப் பணிகள்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்!

புதுக்கோட்டை, நவ.3-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயில் குடமுழுக்கு பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேரில் ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (01.11.2024) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நடைபெற்று வரும் திருக்குடமுழுக்கு பணிகளை நேரில் ஆய்வு செய்து அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத் துறையானது தன் ஆளுகைக் குட்பட்ட திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயத்தில் அமைந்துள்ள சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் அருள்மிகு சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயில் ஆகியன தொன்மை வாய்ந்த திருக்கோயில்களாகும். இவை மத்திய தொல்லியல் துறையின் கட்டுபாட்டில் இந்து சமய அறநிலையத்துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயில்களில் இந்து சமய அறநிலையத்துறையின் மூலம் ரூ. 68 இலட்சம் மற்றும் மத்திய தொல்லியல் துறையால் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் திருக்கோயில்களை புனரமைக்கும் பணிகள், கொடிமரம் புதுப்பித்தல், இடிதாங்கி அமைத்தல், மின் இணைப்புகள் புதுப்பித்தல், கண்காணிப்பு கேமிராக்கள் பொருத்துதல் போன்ற திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திருக்கோயில்களுக்கு வருகின்ற நவம்பர் 8ஆம் நாள் குடமுழுக்கு நடைபெற உள்ளது.

இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (01.11.2024) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம், அருள்மிகு சத்தியகிரீஸ்வரர் திருக்கோயில் மற்றும் சத்தியமூர்த்தி பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களுக்கு நேரில் சென்று, அங்கு நடைபெற்று வரும் குடமுழுக்கிற்கான திருப்பணிகளை நேரில் ஆய்வு செய்து, அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின்போது தஞ்சாவூர் மண்டல இணை ஆணையர் சி.மாரியப்பன், புதுக்கோட்டை உதவி ஆணையர் திருமதி அனிதா, மடப்புரம் திருக்கோயில் உதவி ஆணையர் கணபதி முருகன், மத்திய தொல்லியல் அலுவலர் முத்துக்குமார், திருக்கோயில் செயல் அலுவலர் முத்துராமன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம். மாவட்ட அவைத்தலைவர் கே..திராவிடபக்தன் தலைமையிலும், கழக கொள்கை பரப்பு செயலாளர் அரக்கோணம் நாடளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன், திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர், தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையிலும் திருவள்ளூர் சென்னை சில்க்ஸ் அருகில் உள்ள ஓட்டல் பெரம்பூர் ஸ்ரீனிவாஸ் மாடியில் உள்ள கூட்ட அரங்கில் 07-11-2024 வியாழக்கிழமை காலை 10:00 மணி அளவில் நடைபெறுகிறது.

அது சமயம் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, தொகுதி பார்வையாளர்கள் சண்முகநாதன், மாஸ்டர். பெ.சேகர், கழக விவசாய அணி துணை செயலாளர் ஆர்.டி.இ.ஆதிஷேசன், கழக நெசவாளர் அணி துணை தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், மாநில தொண்டரணி பயிற்சியாளர் மாஸ்டர்.இ.குருதாஸ், மாவட்ட கழக நிர்வாகிகள் டாக்டர் வி.சி.ஆர்.குமரன், பா.உதயமலர் பாண்டியன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்ரவர்த்தி, பொதுகுழு உறுப்பினர்கள் ப.சிட்டிபாபு, எ.கே.ஆதாம், வி. கிஷோர், மு.சுப்பிரமணியம், பி.ராஜேஸ்வரிஇரவிந்திரநாத் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். மேற்கண்ட கூட்டத்தில் திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு கேட்டுக்கொள்கிறேன். சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டு கொள்கிறேன்

பொருள்: 1. தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள் தொடர் நிகழ்ச்சிகள் நடத்துவது குறித்து

2. வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்ட உடன் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியில் அப்பணியினை மேற்கொள்வது குறித்து முழுமையாக

3. கழக ஆக்கப் பணிகள்

குறிப்பு = செயற்குழுவிற்கு வரக் கூடிய ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை முதலமைச்சரின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் குறித்த விவரங்களுடன் வருகை தர வேண்டும்

திருத்தணி **எஸ்.சந்திரன்**, எம்.எல்.ஏ.,
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

முதலமைச்சர், கழகத் தலைவர், தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அறிவுறுத்தலின்படி, மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழிகாட்டுதலின்படி, மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி, வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், அயப்பாக்கம், வானகரம், அடையாளம்பட்டு ஊராட்சி தி.மு.க. சார்பில் வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி தலைமையில் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், பாக முகவர்கள் (பி.எல்.ஏ2) நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது. காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., தொகுதிப் பார்வையாளர் பி.டி.பாண்டிச்செல்வம் ஆகியோர் ஆலோசனை வழங்கினர்.

ஏ.பி.நந்தகுமார் முன்னிலையில் வேலூரில்

மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

வேலூர், நவ.3 -

வேலூர் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் வேலூர் மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் அணைக்கட்டு சட்டபேரவை தொகுதி, அணைக்கட்டு மத்திய ஒன்றிய அவைத் தலைவரும், பொதுக்குழு உறுப்பினருமான இரா.சி. மணிமாறன் வரவேற்பில் தேவி செட்டிகுப்பம் ஊராட்சி, ஆண்டிகொட்டாய், தீபாபாத் ஆத்துமேடு காலனி, அம்பேத்கர் புது காலனி ராமாச்சாரி கொட்டாய், ஆதிராவிடர் காலனி, சின்னகுப்பம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ம.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகளிலிருந்து விலகி 383 பேர் தி.மு.கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதில் அணைக்கட்டு மேற்கு ஒன்றியச் செயலாளர், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, அணைக்கட்டு மத்திய ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன், மாவட்ட துணைச் செயலாளர் ஜி. எஸ்.அரசு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர், ஒன்றியக்குழு உறுப்பினர் என். பிரகாஷ் மற்றும் கிளை செயலாளர் ஏ.ரகு, பொருளாளர் ராமமூர்த்தி, கோவிந்தசாமி, முரளி, கிருஷ்ணன், யுவராஜ், சாமிநாதன், வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை வடக்கு மாவட்டம்

பகுதி வாரியாக பாகநிலை முகவர்கள் (BLA-2) கூட்டங்கள்!

மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர்அவர்களின் அறிவுறுத்தலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி சென்னை வடக்கு மாவட்டத்தில் பகுதி வாரியாகபாகநிலை முகவர்கள் (BLA-2)கூட்டங்கள்கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக் குட்பட்ட முன்னாள்-இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாநில - மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி செயலாளர்கள், அந்தந்த பகுதிக்குட்பட்ட பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள் மாவட்ட - பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்கள் (BLA-2) கலந்து கொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கின்றேன்.

நாள்	பகுதி	நடைபெறும் இடம்
05-11-2024 செவ்வாய்க்கிழமை	மாலை 5.00 மணி பெரம்பூர் தெற்கு	மைசூர் மஹால் E.H.ரோடு, சர்மா நகர்
	மாலை6.00 மணி பெரம்பூர் வடக்கு	S.M.மஹால், T.H.ரோடு, M.R.நகர்
06-11-2024 புதன்கிழமை	மாலை 5.00 மணி ஆர்.கே. நகர் மேற்கு	நாடார்கள் சங்க திருமணமாளிகை, நேதாஜிநகர், தண்டையார்பேட்டை.
	மாலை 6.00 மணி ஆர்.கே. நகர் கிழக்கு	S.S.மஹால், இளைய தெரு, சென்னை - 81.
07-11-2024 வியாழன்கிழமை	மாலை 5.00 மணி இராயபுரம் மேற்கு	பாரூக் மஹால், மீனாட்சி அம்மன் பேட்டை.
	மாலை 6.00 மணி இராயபுரம் கிழக்கு	ஸ்ரீ பார்ட்டி ஹால் G.A.ரோடு

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட பகுதிகழக செயலாளர்கள் முறையாக அழைப்பிதழ்களை தங்கள் பகுதியில்உள்ள அனைத்து நிர்வாகிகளுக்கும் வழங்கி அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்ளசெய்திட வேண்டுகிறேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்குப் பகுதி, 113–வது வார்டுக்குட்பட்ட, கழக நிர்வாகிகள் மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு சால்வை அணிவித்து பட்டு வேட்டி, சட்டை மற்றும் மகளிருக்கு இனிப்பு, புடவைகளை பிரேமா சுரேஸ் எம்.சி. வழங்கினார். உடன் நுங்கை எஸ்.சுரேஸ், நுங்கை தே.ஹரி, நுங்கை எஸ்.சிரிதர், வி.மதன்குமார், செஞ்சி எஸ்.புருஷோத்தமன், பானா ஏழமலை, நுங்கை ஆர்.பார்த்திபன், நுங்கை வி.ஆனந்த்குமார், ஆர்.மணிகண்டன், எஸ்.சாரதி நட்பு நவின், இ.இமானுவேல். ஆகியோர் உள்ளனர்.